## திராவிட மாதம் செப்டம்பர்!

தமிழ்நாட்டின் கடந்த நூற்றாண்டு வரலாற்றில், செப்டம்பர் மாதம் பல அரசியல் சிறப்புகளைக் கொண்டுள்ளது. வரலாற்று அடிப்படையில், தமிழ்நாட்டின் பல புதிய திருப்பங்களை உருவாக்கியதிலும், செப்டம்பர் மாதம் முன்னிலை பெற்றிருக்கிறது.

தந்தை பெரியார் பிறந்த நாள் செப்டம்பர்–17.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் செப்டம்பர்–15.

தி.மு.கழகம் தொடங்கப்பட்ட நாள் செப்டம்பர்– 17.

சுயமரியாதை இயக்க வீரர் சௌந்தரபாண்டியனார் பிறந்த நாள் செப்டம்பர் –15.

அண்ணா அறிவாலயம் திறக்கப்பட்ட நாள் செப்டம்பர்–16.

ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் விலையில் வழங்கி, பட்டினிச் சாவு இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றியதும், இந்தியாவுக்கே முன்னோடியாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதும், செப்டம்பர் 15–ஆம் தேதிதான். நீதிக்கட்சி ஆட்சி தொடங்கி, அதன் தொடர்ச்சியான இன்றைய திராவிட மாடல் ஆட்சி வரை பல சட்டங்களும் திட்டங்களும் செப்டம்பரில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவை ஏற்படுத்திய புரட்சிகர மாற்றங்களால், இன்று உலகெங்கும் தமிழர்கள் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள்.

தி.மு.கழக வரலாற்றில் செப்டம்பர் மாதத்தில் கழகம் நடத்தும் முப்பெரும் விழாவும், அரசியல் களத்தில் எதிர்பார்க்கப்படும் நிகழ்வு. இதையொட்டி, கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணி, கழகத்தின் அயலக அணியுடன் இணைந்து, செப்டம்பர் மாதத்தை திராவிட மாதமாக 'உலகெங்கும் திராவிடம்' என்ற தலைப்பில் கொண்டாட உள்ளது எனப் பத்திரிகையாளர் கோவி.லெனின் அவரது முகநூல் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

இயற்கைச் சூழலில் தமிழ்நாட்டின் பல பகுதிகளையும் ரசிப்பதற்கு ஏற்ற மாதம் செப்டம்பர், அதேநேரத்தில் கழகத்தின் சமூக வலைதளப் பக்கங்களில் திராவிட மாதப் பதிவுகளையும் கண்டும் அரசியல் பயில்வோம்.

## :.ப்ளாஷ்பேக்





கவிஞர் மோசே

### அவர் வாசிப்பில் அகம் மகிழ்ந்தேன்!

2009-ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் பற்றி 'தாய் மனம்' என்கிற தலைப்பில் புதுக்கவிதை நூல் எழுதி வெளியிட்டேன். அந்த நூலுக்கு, இன்றைய முதலமைச்சர் அவர்களும், இனமானப் பேராசிரியர் அவர்களும் வாழ்த்துரை அளித்திருந்தனர். 2011-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் நேர்காணலின் போது தளபதி, இனமானப் பேராசிரியர், முன்னிலையில், என் அன்புத் தலைவர் முத்தமிழறிஞரிடம் அந்தப் புத்தகத்தை அளித்தேன். அந்தப் புத்தகத்தை அவர் அப்போதே வாசிக்க ஆரம்பித்ததைப் பார்த்து என் உள்ளம் குளிர்ந்தது. அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள் எழுதிய **'கலைஞர் என்னும் தாய்'** நூல் வெளியீட்டு விழா நிகழ்வுகளைப் பார்த்தபோது, இவை எல்லாம் மனதில் தோன்றி மறைந்தன.

**– கவிஞர் மோசே, துணை அமைப்பாளர், மாவட்ட இலக்கிய அணி, நெல்லை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### போட்டியில்லாதத் தேர்தல்!

1946-ஆம், ஆண்டு ஜனவரி தொடங்கி ஏப்ரல் வரை, சென்னை மாகாணத்துக்கான தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்து, வேறு கட்சிகள் எதுவும் போட்டியிடவில்லை. நீதிக்கட்சி, திராவிடர் கழகமாக பெயர் மாற்றம் ஆகி இருந்ததோடு, 'தேர்தலில் நிற்பதில்லை' எனும் தற்காலிக முடிவை எடுத்திருந்ததால், அதன் சார்பாக எவரும் போட்டியிடவில்லை. சென்னை மாகாணத்தில் 215 தொகுதிகளில், 94 தொகுதிகள் போட்டியே இல்லை. வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு அதிகமான தொகுதிகளில் போட்டியின்றி வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை.


# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் **27**

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!

## பெரும்பான்மையினர் ஆதிக்கத்தை ஏற்கமுடியாது!

குருநானக்



*இந்தியாவில் அதிக அளவிலான பட்டியலின மக்களையும் (31.9%), பட்டியலின இட ஒதுக்கீட்டையும் (25%) கொண்ட மாநிலம் பஞ்சாப். இன்றைய இந்தியா-பாகிஸ்தான் எல்லைக் கோட்டுக்கு இருபுறமும் உள்ள பஞ்சாப் மாநிலம், ஹரியானா, ஹிமாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கிய அன்றைய பஞ்சாப் மாகாணம் இரத்தமும் மரணமும் நிறைந்த வரலாற்றைக் கொண்டது.*

*1849-ஆம் ஆண்டு, ஆங்கிலேயர்களால் கடைசியாக இந்தியாவுடன் இணைக்கப்பட்ட பகுதி, பஞ்சாப் மாகாணம். 'ஜாலியன் வாலா பாக் படுகொலை', 'நாட்டுப்பிரிவினை' என இரத்தத்தையும் மரணத்தையும் வேறெந்த மாகாணங்களையும் விடக் கூடுதலாகச் சந்தித்தது.*

*15-ஆம் நூற்றாண்டில் நிலைபெற்றிருந்த பல மதங்களில் இருந்த முற்போக்கு அம்சங்களையும் இணைத்து, குருநானக் உருவாக்கிய 'சீக்கிய மதம்' சாதியை நிராகரித்தது. சாதி வேறுபாடில்லாமல் அனைவரும் இணைந்து ஒரே இடத்தில் உணவு சமைத்தல், ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணுதல் போன்ற சமத்துவச் செயல்பாடுகளை வலியுறுத்திய சீக்கிய முறைகளான 'சங்கத்', 'லங்கர்' (சமூக சமையலறை) உள்ளிட்ட புதிய முறைகள் பார்ப்பனியம் வலியுறுத்தும் பிறப்புசார் சாதிய ஏற்றத்தாழ்வுகளை மறுத்தன.*

**ஏனைய இந்திய மாகாணங்களைக் காட்டிலும், பார்ப்பனர்களின் எண்ணிக்கையும் பஞ்சாப் மாகாணத்தில் குறைவு.**

*ஏனைய இந்திய மாகாணங்களைக் காட்டிலும், பார்ப்பனர்களின் எண்ணிக்கையும் பஞ்சாப் மாகாணத்தில் குறைவு. பார்ப்பனர்களைக் காட்டிலும், அரோரா, அகர்வால், காத்ரி ஆகிய உயர்சாதியினர் கூடுதலாக கல்வியறிவு பெற்றிருந்தனர். 1921-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 1000 பேர்களுக்கு காத்ரிகள் 231, அகர்வால்கள் 209, அரோரா 172, பிராமணர் 122, சமார் 5, சுஹ்ரா (பால்மிகி) 2 பேரும் கல்வியறிவு பெற்றிருந்தனர்.*

*ஏனைய மாகாணங்களை ஒப்பிடுகையில், பஞ்சாபில் சாதிய இறுக்கம் குறைவு. சாதிய இறுக்கம் குறைவு என்பதால், சாதிய ஏற்றத்தாழ்வு இல்லை என்று பொருளல்ல. சீக்கிய மதத்தின் கோட்பாட்டு நிலைப்பாடு சாதிப் படிநிலை, சாதி வேறுபாடுகளுக்கு எதிரானதாக இருந்தாலும், சாதிய அமைப்பு பஞ்சாப் மாகாணத்தில் முற்றிலும் அழிந்துவிடவில்லை. சீக்கிய மதத்தைப் பின்பற்றியவர்களும் சாதிகளாகப் பிரிந்திருந்தனர். சீக்கிய மதத்தைப் பின்பற்றிய 'சமார்கள்', 'மஜிபி' சாதியினர் மிகப் பின்தங்கிய நிலையில் இருந்தனர்.*

*1909-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மிண்டோ-மார்லி சட்டத்தில், இஸ்லாமியர்களுக்கு தனித்தொகுதி கொடுக்கப்பட்டது. சீக்கியர்களின் நலனை முன்னிட்டு, 1902-இல் தொடங்கப்பட்ட அமைப்பான 'சீஃப் கால்சா திவான்' (Chief Khalsa Diwan) இஸ்லாமியர்களுக்கு வழங்கப்பட்ட தனித் தொகுதிகளைப் போலவே சீக்கியர்களுக்கும் தனித்தொகுதி கோரியது. ஆனால், அப்போது சீக்கியர்களின் கோரிக்கை ஏற்கப்படவில்லை. இருப்பினும், சீக்கியர்கள் தங்கள் கோரிக்கைகளைக் கைவிடவில்லை. 1917-ஆம் ஆண்டு இந்தியா வந்த பிரிட்டனின் இந்தியத்துறைச் செயலாளர் மாண்டேகுவை பாட்டியாலா மன்னர் பூபேந்திரசிங் சந்தித்து, சீக்கியர்களின் எண்ணத்தைத் தெரிவித்தார். அதே ஆண்டில் சீக்கியத் தலைவர்கள், வைசிராய் செம்ஸ்போர்டுவைச் சந்தித்து பஞ்சாப் சட்டப்பேரவையில் மூன்றில் ஒரு பங்கு இடங்களை சீக்கியர்களுக்கு ஒதுக்கவேண்டும் என்று கோரினர்.*

*1918-ஆம் ஆண்டு, மாண்டேகுவும் செம்ஸ்போர்டும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில், 'முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டதைப் போன்றே சீக்கியர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்' என்று உறுதியளித்தனர். இதைப் பாராட்டி, சீஃப் கால்சா திவான் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், "எண்ணிக்கை அடிப்படையில் பெரும்பான்மையினர் ஒரு சிறுபான்மைச் சமூகத்தை அடக்குவதை அனுமதிக்க முடியாது" என்று குறிப்பிட்டிருந்தனர். இச்சொற்கள் இன்றும் முக்கியத்துவம் உடையதாக உள்ளன.*

**...குரல் ஒலிக்கும்**

# மாநாடு

ர.பிரகாசு **27**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

## தீர்வுக்குத் திசைகாட்டிய டெசோ!

டெசோ மாநாட்டில் தலைவர் கலைஞருடன் அகில இந்தியத் தலைவர்கள்.



*இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறை 1970-களில் முளைக்கத் தொடங்கி, 1980-களில் தீவிரமடைந்தது. இவ்வொடுக்குமுறையை எதிர்த்து, தனிநாடு கோரி குழுக்கள் உருவாகின. அதற்கு தமிழ்நாட்டில் இருந்து ஆதரவு அலைகள் உருவாகின. அதில், மிக முக்கியதொரு அலை தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு 'டெசோ'. 13.05.1985 அன்று தி.மு.க-வின் அன்றைய தலைமை அலுவலகமுமான அன்பகத்தில் உருவாக்கப்பட்டது டெசோ. முத்தமிழறிஞர் கலைஞர், ஆசிரியர் கி.வீரமணி, பழ.நெடுமாறன் ஆகியோர் கூடி உருவாக்கிய அமைப்பு 'டெசோ'.*

*'இலங்கைத் தமிழர் படுகொலையை உடனே நிறுத்தவேண்டும்' எனக்கோரி டெசோ சார்பில், 1985-ஆம் ஆண்டு அக்டோபரில் கோவை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சி, சேலம், வேலூரில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்ற பேரணிகள் நடத்தப்பட்டன. சின்னஞ்சிறு ஊர்களில்கூட அப்போதைய இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேவின் உருவ பொம்மைகள் எரிக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, 1986-ஆம் ஆண்டு, மே 4-ஆம் தேதி மதுரையில் 'டெசோ மாநாடு' கூட்டப்பட்டது. முன்னாள் பிரதமர் வாஜ்பாய், மறைந்த ஆந்திர முன்னாள் முதலமைச்சர் ராமாராவ், கர்நாடக உள்துறை அமைச்சர் ராசையா, வடமாநிலத் தலைவர்களான எச்.என்.பகுகுணா, ஜஸ்வந்த்சிங், காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் அப்துல்ரஷீத் கபூர், பஞ்சாப் அகாலிதளம் பொதுச்செயலாளர் பல்வந்த்சிங் ராமுவாலியா, அசாம் கண பரிஷத்தைச் சேர்ந்த தினேஷ் கோஸ்வாமி கம்யூனிஸ்ட் தலைவர்கள் எனப் பலரும் டெசோ மாநாட்டில் கலந்துகொண்டனர்.*

*போராளிக் குழுக்களான **'டி.யு.எல்.எஃப்.'** சார்பாக அமிர்தலிங்கம், விடுதலைப் புலிகள் சார்பாக திலகர், **'புரோடெக்'** சார்பாக சந்திரகாசன், **'ஈராஸ்'** சார்பாக ரத்தினசபாபதி, **'டி.இ.எல்.எஃப்.'** சார்பாக ஈழவேந்தன், 'ஈ.பி.ஆர்.எல்.எஃப்.' சார்பாக வரதராஜப் பெருமாள், **'ப்ளாட்'** சார்பாக வாசுதேவன் ஆகியோர் வருகை தந்தனர். மதியம் நடைபெற்ற அரங்கக் கூட்டத்தில், இலங்கைத் தமிழர்கள் அந்நாட்டின் நிலைமையை எடுத்துரைத்தனர். அதன்பிறகு, தீர்மானக் கூட்டம் நடைபெற்றதுடன், கூட்டத்திற்குப் பிறகு தீர்மானங்களை வாசித்தார், கலைஞர். "இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசு அலட்சியப் போக்கைக் கைவிட வேண்டும், தமிழர்களை அழிக்கும் செயலில் ஈடுபடும் இலங்கை அரசுக்கு எந்தவொரு நாடும் நிதியுதவி அளிக்கக்கூடாது. இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஐ.நா. போன்ற சர்வதேச மன்றத்திற்கு எடுத்துச் சென்று தீர்வு காண இந்திய அரசு முற்பட வேண்டும்" எனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

**"சகோதர யுத்தம் வேண்டாம் என்றும், அது நமது குறிக்கோளைக் குலைத்துவிடும்" என்றும் போராளிக் குழுக்களிடமும் உருக்கத்தோடு கேட்டுக்கொண்டார்.**

*மாநாட்டில் பேசிய கலைஞர், "இலங்கையிலே படுகொலை தொடர நிதியை வழங்கி, இலங்கை அரசின் கொலைவாளுக்கு எந்த நாடும் துணையாக இருக்குமேயானால், அந்நாடுகள் எங்கள் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள அனைத்து மக்களின் அதிருப்திக்கும் ஆளாக நேரிடும்'' என்று எச்சரித்தார். "சகோதர யுத்தம் வேண்டாம் என்றும், அது நமது குறிக்கோளைக் குலைத்துவிடும்" என்றும் போராளிக் குழுக்களிடமும் உருக்கத்தோடு கேட்டுக்கொண்டார். ஆனால், மறுநாளே 'டெலோ' தலைவர் ஸ்ரீசபா ரத்தினம் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார்.*

*சுமார் 40 ஆண்டுகளைக் கடந்து, இப்போது ஈழத் தமிழர் பிரச்சினை சர்வதேச மன்றத்தையே நாடியிருக்கிறது. இது அன்று 'டெசோ' காட்டிய திசை... முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய திசை...*

**...கூட்டம் திரளும்**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**590**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131